*கவனிக்க .- 13.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1851 - 2014 පෙබරවාරි මස 21 වැනි සිකුරාදා - 2014.02.21

*1851 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 226 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 227 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 231 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க** *.- றோயல் புண்ணியமைப்பு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, சனவரி மாதம் 31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2014, மாச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, பெப்புருவரி 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

*முன்தெரிவுசெய்யப்பட்ட 45 எண்ணிக்கையுள்ள புகையிரத நிலையங்களுக்கான சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்*

45 எண்ணிக்கையுள்ள முன்தெரிவு செய்யப்பட்ட புகையிரத நிலையங்களுக்கான சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போது அரசாங்க மற்றும்/அல்லது தனியார் துறை அமைப்பாண்மைகளுக்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதில் போதுமானளவு அனுபவமுடைய புகழ்வாய்ந்த கம்பனிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு 10, ஓல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

2. மீளளிக்கப்படாத கட்டணமான 2,500 ரூபாவை மாத்திரம் 2014.02.24 ஆந் திகதி பி. ப. 3 மணிவரை கொழும்பு 10, ஓல்கட் மாவத்தை, களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் 2014.02.25 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு மூடப்பட்டு, அவைகளை மூடியவுடன் உடனடியாகவே கொழும்பு 10. ஓல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4. விலைமனுக்கள், பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அம்முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

5. விலைமனு ஆவணங்களை கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :

புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகர்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இலக்கங்கள் : 2438078 அல்லது 2436818.
தொலைநகல் இல. : 2432044.

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7043

2-586

---

## இலங்கை புகையிரத சேவைகள்

*30,000 எண்ணிக்கையான பயணிகள் பெட்டி திருகாணிகள், 2,000 எண்ணிக்கையான கடவை ஆணிகள் மற்றும் சுரைகள், 88 இறாத்தல் 3,000 மீன் தகடு ஜோடிகள் மற்றும் 80 இறாத்தல் 3,000 மீன் தகடு ஜோடிகள் ஆகியவற்றை இலங்கை புகையிரத சேவைகளுக்கு பெறுதல்*

பின்வரும் பொருட்களின் கொள்வனவிற்காக, உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, ஓல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

| அம்ச இல. | விபரம் | தொகையளவு |
|---|---|---|
| 1 | பயணிகள் பெட்டி திருகாணிகள் | 30,000 எண்ணிக்கை |
| 2 | கடவை ஆணிகள் (22மி.மீ. x 114 மி.மீ.) | 2,000 எண்ணிக்கை |
| 3 | மீன் தகடுகள் 88 இறாத்தல்கள் | 3,000 ஜோடிகள் |
| 4 | மீன்தகடுகள் 80 இறாத்தல்கள் | 3,000 ஜோடிகள் |

விலைமனுதாரர்கள் அவர்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அவர்களினால் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட இலங்கையில் பதிவுபெற்றுள்ள தராதர அங்கீகாரம்பெற்ற முகவரொருவர் மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 3,000 ரூபாவை மாத்திரம் இலங்கைப் பணத்தில் அல்லது இலகுவாக மாற்றக்கூடிய சமமான பணத்தில் செலுத்திய பின்னர் 2014.03.06 ஆந் திகதி பி. ப. 3 மணிவரை (இலங்கை நேரம்) இலங்கை, கொழும்பு 10, ஓல்கட் மாவத்தை, களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் 2014.03.07 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. ஐஎஸ்ஓ 9001 : 2000/பிஎஸ் ஈஎன் ஐஎஸ்ஓ 9001 : 2000 சான்றிதழ்பெற்ற அல்லது கொள்வனவாளரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமை தரம் கொண்டுள்ள நிறுவனங்களால் உற்பத்தி/வழங்கலை மேற்கொள்ள முடியும்.

5. விலைமனுக்கள் மூடப்படும் நேரம் முடிந்தவுடன் இலங்கை, கொழும்பு 10, ஓல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் தலைமையகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்துக்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத்தபால் மூலம் அல்லது கையோடு கொண்டுவந்து கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

7. இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் எவ்வித கட்டணமுமின்றி விலைமனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ய முடிவதுடன் மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொள்ளவும் :

புகையிரத களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சிய திணைக்களம்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இல. : 2432044

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7076

2-587

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ப்ளட்போர்ம் டெக்னொலஜி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 87182
பதிவுத் திகதி : 2012.07.20
பதிவுமுகவரி : லெவல் 1 2ஏ 1/1, கிரெகரி வீதி, கொழும்பு 7

கம்பனி செயலாளர்கள்.

2-541

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மெடி ஃபோர்ஸ்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 96579
பதிவு முகவரி : இல. 419/சீ, ரண்முதுகல, கடவத்தை

கம்பனி செயலாளர்கள்.

2-507

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கணினி மேலாண்மை நிபுணர்கள் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : ஜீஏ92351
பதிவுத் திகதி : 2013.05.03
பதிவு முகவரி : இல. 49, ஜெயதிலக மாவத்தை, பாணந்துறை

எல். எல். ரதி வை. டி. சில்வா,
கம்பனி செயலாளர்.

2-537

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அமரேசியன் றிசோசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 96679
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 23.01.2014
பதிவு முகவரி : இல. 61/9, தர்மபால மாவத்தை, கொழும்பு 3

எல். எம். மெனேஜ்மென்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 291/32ஏ, ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,
கொழும்பு 05.

2-516

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தலவதுகொட, மாதிவெல றோட், இலக்கம் 572/2 இல் மாபலானகம ஆரச்சிகே ஷிரோமா மல்காந்தி ஆகிய என்னால் மேற்கூறிய அதே விலாசத்தில் வசிக்கும் மாபலானகம ஆரச்சிகே காமினி என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு விந்தியா குமாரி விஜேரத்தின சிரிவர்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.08.27 ஆந் திகதியுடைய 126 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்துள்ளமை பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதுடன் எதிர்காலத்தில் மேற்படி மாபங்கம ஆரச்சிகே காமினி என்பவரால் எனக்காக செய்யப்படும் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்கள் காரியங்களுக்கும் நான் பொறுப்பல்ல என்பதையும் இத்தால் யாவருக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

மாபங்கம ஆரச்சிகே ஷிரோமா மல்காந்தி.

2-538

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, கொழும்பு 3, காலி வீதி, 75 ஆம் இலக்க கிரஸ்கற் றெசிடென்சிஸ், 11-3 சி/4டி என்ற முகவரியையும் 640501162V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய ஷிரான் கிரிஷாந்த் டயஸ் ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. ஆர். பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1415 ஆம் இலக்கத்தையும் 2012, யூன் 26 ஆந் திகதியையுடையதும், பத்தரமுல்லவில் பதிவாளர் நாயக அலுவலகத்தில் பேணப்படும் எழுத்துமூல அதிகாரம் குறித்த 99 ஆம் இலக்க நாட்புத்தகத்தின் 4695 ஆம் தொகுதியின் 51 ஆம் பக்கத்தில் 2012.07.09 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டு இலங்கை, கொழும்பு 03, காலி வீதி, 75 ஆம் இலக்க கிரெஸ்கற் றெசிடென்சிஸ், 11-3சி/4டி என்ற முகவரியையும் மற்றும் 395260308V ஆம் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையை உடையவருமான பேர்ல் பிறின்சி டயஸ் என்பவரின் பெயரில் வழங்கப்பட்ட விசேட அற்றோணி தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப் பட்டதுடன், எனது சார்பாக செய்யப்படும் எந்தவித காரியங்களுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஷிரான் கிரிஷாந்த் டயஸ்.

2-609

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹுங்கம, கிவுல, இல. 111 எனும் இடத்தில் வசிக்கும் கயா கிறிஷாந்த அபேதீர ஜயவிக்ரம ஆகிய என்னால், பிரசித்த நொத்தாரிசு சுகத்ததாஸ காரியவசம் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 157 ஆம் இலக்க 2002.08.03 ஆந் திகதி கொண்ட அற்றோணி உறுதிப்பத்திரம் மூலம் அவ் அற்றோணி உறுதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள காரணங்களைப் பற்றி ஹுங்கம, கிவுல, இல. 111 எனும் இடத்தில் வசிக்கும் நிமல் அபேதீர ஜயவிக்ரமவிடம் வழங்கப்பட்ட அற்றோணி தத்துவம் 2014.02.01 ஆந் திகதி முதல் இரத்துச்செய்யப்பட்டுள்ளதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் வசிக்கும் அனைத்து பொதுமக்களிடமும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கயா கிறிஷாந்த அபேதீர ஜயவிக்ரம.

2-606

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹிக்கடுவை, வவுளகொட கந்தஉட வீதி, தஹநாயககொட வத்தை, இலக்கம் 43/5 இல் குடியிருக்கும் ரணசிங்ஹ வீரகோன் லீலாவதி ஆகிய நான், இலங்கையின் இத்தாலிய தூதுவர் அலுவலகத்தில் தூதுவரின் முன்னிலையில் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2009.02.13 ஆந் திகதிய அற்றோணி தத்துவம் மூலம் ஹிக்கடுவை, வவுளகொட, மஹகெதர வத்தையில் குடியிருக்கும் சித்ரசேன கொன்ஸால் கோரல என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவபத்திரத்தை இன்றிலிருந்து செல்லுபடியற்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக்கு குடியரசு அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றேன். இத்தத்துவப் பத்திரம் மூலம் அல்லது அதன்கீழ் எவரொரு வரினாலாவது மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லது வேறு எவ்விதமான நடவடிக்கைகளுக்கும் இன்றைய திகதியில் இருந்து நான் அதற்கு பொறுப்பாளி இல்லை என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ரணசிங்ஹ வீரகோன் லீலாவதி.

2-463

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹிக்கடுவை, வவுளகொட கந்தஉட வீதி, தஹநாயக மாகொட வத்தை, இலக்கம் 43/5 இல் குடியிருக்கும் ஹொரவல விதானகே சஸங்க லீலாகந்த ஆகிய நான், காலி பிரசித்த நொத்தாரிசு பிரேமரத்ன திரானகம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2008.11.27 ஆந் திகதிய 6158 ஆம் இலக்க அற்றோணி தத்துவம் மூலம் ஹிக்கடுவை, வவுளகொட, மஹகெதர வத்தையில் குடியிருக்கும் சந்திரசேன கொன்ஸால் கோரால என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவபத்திரத்தை இன்றிலிருந்து செல்லுபடியற்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக்கு குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றேன். மேலும் இத்தத்துவப் பத்திரம் மூலம் அல்லது அதன்கீழ் எவரினாலாவது மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லது வேறு எவ்விதமான நடவடிக்கைகளுக்கும் இன்றைய திகதியில் இருந்து நான் அதற்கு பொறுப்பாளி இல்லை என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹொரவல விதானகே சஸங்க லீலாகந்த.

2-464

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பர்மெக் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 96766
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 25/4, மொன்டி விஸ்டா, மஞ்சனாயக வத்த பிளேஸ், வளவ்வத்தை வீதி, கங்கொடவில, நுகேகொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 29, சனவரி 2014

சபையின் கட்டளைப்படி,

பிசினெஸ் சொலுஷன்ஸ் அன்ட்
செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

2-564

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கிளாசிக் லைட்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 96730
*கூட்டிணைப்புத் திகதி* : 2014, சனவரி 27
*பதிவு முகவரி* : இல. 25, 680/எச்/4, நாரங்கொடலுவ, பட்டுவத்த

கம்பனி செயலாளர்.

2-514

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஸ்கைகொம் லங்கா (பீவீரி) எல்ரீடீ
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 96694
*கம்பனியின் முகவரி* : இல. ஈ/எல்ஜீ/12, டயஸ் பிளேஸ், குணசிங்ஹபுர, கொழும்பு 12

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

2-458

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ரத்தெல்ல ஒடோமொபைல்ஸ் (பீவீரி) எல்ரீடீ
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 96678
*கம்பனியின் முகவரி* : இல. 43, டாக்டர் என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

2-459

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றியமைக் கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : ஐ டி லங்கா லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 984
*பதிவு முகவரி* : மெல்பொட் எஸ்ட்டேட், கொத்தலாவலை, கடுவெலை
*கம்பனியின் புதிய பெயர்* : இன்டர்நஷனல் டிஸ்டிலெரீஸ் லிமிட்டெட்

இன்டர்நஷனல் டிஸ்டிலெரீஸ் லிமிட்டெட் சார்பாக,

ஜேசெய் அன்ட் கம்பனி,
கம்பனி செயலாளர்கள்.

2-466

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஷென்ரின் இன்டர்நஷனல் (பீவீரி) எல்டீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 95535
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 489/3ஏ, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05

கம்பனியின் பெயர் : வன் ஸ்டொப் சிம் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 95944
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 2டீ, 20, பல்மைரா கோட், பல்மைரா அவெனியூ, கொழும்பு 03

கம்பனியின் பெயர் : லைகா ப்ளை (பீவீரீ) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 96006
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : லெவல் 6, ஈஸ்ட் டவர், வேர்ல்ட் ட்ரேட் சென்டர், கொழும்பு 01

கம்பனியின் பெயர் : எஸ் பீ சியாரா ஜொயின்ட் வென்ஜர் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 96152
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : 3 ஆம் மாடி, இல. 385, காலி வீதி, கொழும்பு 03

கம்பனியின் பெயர் : டேக்லீவர் சொலுஷன்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 96181
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : மே./பா., செயலாளர்கள், தளமாடி, ''சாயுறு செவன'', இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு 2

கம்பனியின் பெயர் : சிங்க ராவனா லொஜிஸ்டிக்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
கம்பனியின் இலக்கம் : பீவீ 96162
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 69/14, கட்டுமான, நுவரெலியா

2-630

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழே காட்டப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : தோர் டிவெலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 96440
பதிவு அலுவலகம் : இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 03

மேற்கூறப்பட்ட கம்பனிக்காக,

பிரன்டிக்ஸ் மனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 409, 3 ஆவது மாடி,
காலி வீதி,
கொழும்பு 03.

2-635/1

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : நிர்பித்த அட்வென்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 96512
பதிவு அலுவலகம் : இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 03

மேறகூறப்பட்ட கம்பனிக்காக,

பிரன்டிக்ஸ் மனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 409, 3 ஆவது மாடி,
காலி வீதி,
கொழும்பு 03.

2-635/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பிரேஸ்டிஜ் குரூப் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 96760
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 28.01.2014
பதிவு முகவரி : இல. 410/2A, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07

எல். எம். மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 291/32A,
ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.

2-637/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பீஜீ கன்ஸ்ட்ரக்ஷன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 96734
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 27.01.2014
பதிவு முகவரி : இல. 410/2A, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07

எல். எம். மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 291/32A,
ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.

2-637/2

### கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனயனியின் பெயர் 2014.01.28 ஆந் திகதி முதல் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் விவசாய மற்றும் வர்த்தக வங்கி

கம்பனியின் பதிவு இலக்கம் : பிபீ 4847

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 696, காலி வீதி, கொழும்பு 03

கம்பனியின் புதிய பெயர் : வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி

நிர்வாகக்குழு உத்தரவின்படி,

சரோஜினி துனுவில,
கம்பனி செயலாளர்.

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி.

2-641

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) ஆம் பிரிவின் கீழ் , கீழ்வரும் கம்பனி பதிவு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. :-

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை கப்றுக்க (தனியார்) கம்பனி |
| கம்பனி இலக்கம் | : பீவீ 74594 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : ஒஸ்ரேலியன் மைக்ரேசன் கன்சல்டன்சீஸ் சினமன் லேக் சைட், கீழ் மாடி, இல. 115, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை |
| பதிவு செய்யப்பட்ட திகதி | : 29.09.2010 |

மேலே கூறப்பட்ட கம்பனியின் சார்பாக அதன் செயலாளர்.

இல. 179/13, வெலிவிட்ட ரோட்,
மாலபே,
தொ. இல. : 0773738532

எல். ஏ. பதிரவிதான

2-576/1

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : ஒக்ஸ்பேர்ட் இம்போட்ஸ் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் |
| கம்பனி இலக்கம் | : பீவீ 96734 |
| கூட்டிணைப்புத் திகதி | : 06.01.2014 |
| பதிவு முகவரி | : ஷாட் பிசினஸ் சிஸ்டெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இல. 141/3, வொக்ஸ்சோல் வீதி, கொழும்பு 02. |

கம்பனிச் செயலாளர்கள்.

2-576/2

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனியின் பெயர் 2011, சனவரி 26 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது:-

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : ஷாட் டெக்ஸ் இன்டெலிஜென்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் |
| பதிவிலக்கம் | : பீவீ 14545 |
| பதிவு முகவரி | : இல. 141/3, வொக்சோல் வீதி, கொழும்பு 2. |
| கம்பனியின் புதிய பெயர் | : ஆர். சீ. டெக்ஸ் கொன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், |

கம்பனிச் செயலாளர்கள்.

ஷாட் பிசினஸ் சிஸ்டெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல. 141/3, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு 02.

2-576/3

---

# ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எம். பீ. எம். எஸ். ஆரியவன்ஷ – கணக்கு இல. 1056 5340 9199

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 17.12.2009 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2011.05.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2011.09.07 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக் கிணங்க நிலுவை முதலான, இருபத்தொன்பது இலட்சத்து நான்காயி ரத்து நூற்று இருபத்திரண்டு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 29,04,122.13) 2009, ஒற்றோபர் 30 ஆந் திகதி முதல், அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை இருபத்தாறு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று எண்பத்தைந்து ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 26,87,685.75) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தி ஒரு வீதம் (21%), வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை

கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.03.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியாக மாவட்டம், ஹங்குரங்கெத்த பிரதேச செயலாளர் பிரதேசத்தின் உடஹேவாஹெடட்வின் கோஹோக்கா கோரளையின், ஹங்குரன்கெத்த பிரதேச சபை எல்லைகளுக்குள், ரிகில்லகஸ்கட கிராமத்தில் அமைந்த 'டவுன்ட்டன் எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, மே 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 146A/2008 எனும் வரைபடத்தில் காட்டப்பபட் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடமேற்கிற்கு : பீ. சீ. வீதி (ரிகில்லகஸ்கட முதல் மக்குருப்ப வரை) ; தென்கிழக்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எம். எச். நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 10176/34 எனும் வரைபடத்தில் லொட் 1 அதே காணியின் ஒரு பகுதி ; தென்மேற்கிற்கு : P. C. வீதி ரிகில்லகஸ்கட முதல் மக்குருப்ப வரை, மற்றும் ; மேற்கிற்கு : இதே காணியின் ஒரு பகுதி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 12பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட இல. 146A/2008 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 மீள் அளவீடு செய்யப்பட்டு கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது :-

மேற்கூறப்பட்ட ரிகில்லகஸ்கட கிராமத்தில் அமைந்த 'டவுன்ட்டன் எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எம். எச். நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1988, செத்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 10176/34/2 எனும் வரைபடத்தில் காட்டப்பபட் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடமேற்கிற்கு : பிரதான வீதி (ரிகில்லகஸ்கட முதல் மக்குருப்ப வரை) ; தென்கிழக்கிற்கு : இல. 10176/34 எனும் வரைபடத்தில் லொட் 1 அதே காணியின் ஒரு பகுதி; தென்மேற்கிற்கு : இதே காணியின் ஒரு பகுதி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் பன்னிரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 12பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட இல. 10176/34/2 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுவரெலியா காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் R 322/2 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-602

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**மண், மற்றும் மரங்கள் முழுவதும் (வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோறளை தெற்கு: கம்மல் பற்று, மாறவில பதிவுப் பிரிவிற்குள், அங்கம்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ளதும் "சூரியகஹகும்புற என்ற கன்சூரியகஹகும்புற" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. எஸ். சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 27.06.2012 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6703 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 01 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜீ. எஸ். சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 13.12.2001 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4492 இல் குறிப்பிடப்பட்ட துண்டுகள் 01, 02, 03 ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் ஒரு மீள்நிலஅளவையாகவிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டினது) ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : ஆறு தசம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 6.70பே.))**

(கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான வர்ணகுலசூரிய மஹதலகே பிரேங் பெப்டிஸ் ரோனி பீரிஸ், சிலாபத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். என். திசேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 20, செத்தெம்பர் 2012 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1021 மற்றும் 2013, செத்தெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1409 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்.)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- பேன் ஏசியா பேங்க் - வென்னப்புவை கிளையிலிருந்து கொழும்பு சிலாபம் வீதி வழியே நீர்கொழும்பு நோக்கி போலவத்தை வரை ஏறக்குறைய 5.5 கி. மீ. செல்ல விற்பனைக்குரிய இவ்வாதனம் கத்தோலிக்க திருவுருவம் மற்றும் கம்மல வீதியிற்கு தொடர்ந்தாற்போல் வலப்பக்கத்தில் அமைந்துள்ளது.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2014, மாச்சு 14 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2014, பெப்புருவரி 07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;
(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் (ரூபா 3,000).

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 வீதத்தை தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க, முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667218/0112565573.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் பட்டய ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

2-603/1

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோறளை தெற்கு: கம்மல் பற்று, மாறவில பதிவுப் பிரிவிற்குள், வென்னப்புவை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் உல்ஹிட்டியாவ தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள், உல்ஹிட்டியாவ கிராமத்தில் அமைந்துள்ளதும் "அம்பகஹவத்தை", "எத்தெமட்டகஹவத்தை" மற்றும் "கொஸ்கஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 3121 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 01 என அடையாளமிடப்பட்டதும் 20 பேர்ச்சுகள் விஸ்தீரணம் கொண்டதும் உத்தரவபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரஞ்சித் யாப்பா அவர்களால் தயாரிக்கப்பட்ட (அனைத்து வரைபடங்கள்) வரைபடம் இல. 7657 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 01 என அடையாளமிடப்பட்டதும் 2 பேர்ச்சுகள் விஸ்தீரணம் கொண்டதும் வரைபடம் இல. 7737ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 01 என அடையாளமிடப்பட்டதும் 6.5 பேர்ச்சுகள் விஸ்தீரணம் கொண்டதும் வரபைடம் இல. 8822 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 01 என அடையாளமிடப்பட்டதும் 10 பேர்ச்சுகள் விஸ்தீரணம் கொண்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணிகளது) ஏலவிற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : முப்பத்தெட்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 38.5பே.))***

*(கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான வர்ணகுலசூரிய மஹதலகே பிரேங் பெப்டிஸ் ரோனி பீரிஸ், நீர்கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். எல். ஜீ. கூரே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 22, மே 2008 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 5991 மற்றும் 04.09.2008 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல 6018 ஆகிய இரண்டினதும் அத்துடன் சிலாபத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். என். திசேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 21.09.2012 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1023மற்றும் 03.09.2013 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1411 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்.)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பு நகரின் புற எல்லையிலுள்ள பேலியாகொடை பாலத்திலிருந்து இடப்பக்கத்திலுள்ள கடவத்தை வீதியை அடைவதற்கு பேலியாகொடை - புத்தளம் A3 பெருவீதி வழியே அநேகமாக 46 கி. மீ. இற்கு அண்மையில் (ஏறக்குறைய 250 மீற்றரிற்கு முன்னால்) சென்று அதிவேக வீதியிலிருந்து ஏறக்குறைய 150 மீ. இருக்கும் வலப்பக்கத்திலுள்ள 1 ஆவது முதலாவது தனியார் வீதி வரை தாரிடப்பட்டுள்ள கடவத்தை வீதி வழியே தொடரவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2014, மாச்சு 14 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2014, பெப்புருவரி 07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;

(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;

(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் (ரூபா 3,000).

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 வீதத்தை தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க, முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667218/0112565573.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

2-603/2

**செலான் வங்கி பி எல் சி - புத்தளம் கிளை**

*1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட சரத்துக்கள் ) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் மதுரங்குளி வியாபார பதிவு இல. 35-640 ஐ கொண்டுள்ள மெசர்சஸ் ஏ ஆர் றஹமான் ஏ ஆர் றஹீம் பெயரைக்கொண்ட தனியுரிமை நிறுவனத்திற்காக கச்சி இப்ராஹிம் மொகமட் இஸ்மையில் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளுக்காக செலான் வங்கி பி எல் சி இற்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து)*

*வட மேல் மாகாணம் புத்தளம் மாவட்டத்திலுள்ள புத்தளம்பத்து பிரிவின் தென் புத்தளம்பத்து உணவேலியில் அமைந்துள்ள ''கரப்பிட்டி வயல்'' காணி என்று அழைக்கப்படுகின்ற காணி, அனுமதிபெற்ற நில அளவையாளர் டி. பாலச்சந்திரன் என்பவரால் தயாரிக்கப்பட்டு 07.08.2007 என திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 82 இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 01 அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள், பயிர்தோட்டங்கள் அனைத்துடனும் பன்னிரெண்டு ஏக்கர் இருபத்தி ஏழு தசம் நாலு இரண்டு பேர்ச்சர்ஸ் (12ஏ. 0றூ. 27.42பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.*

மேலே விபரிக்கப்பட்டுள்ள சொத்தை 2014 மார்ச் 20 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

காணியைச் சென்றடைகின்ற விதம்.- கொழும்பு -புத்தளம் A 3 அதிவேக வீதியால் சுமார் 72 வது மைல் போஸ்ட், 10ஆவது மைல்போஸ்ட் என்று அழைக்கப்படுகின்றது. இதன் இடது பக்கத்தால் திரும்பி கனேமுல்லை வீதியால் சுமார் 50 மீற். சென்றால் வரும் புகையிரத குறுக்கு பாதையை கடந்து வரும் வலது பக்க வீதியால் சுமார் 125 மீற். சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இடது கைப் பக்கத்தில் அல்லது அதிவேக பாதையின் மேலே குறிக்கப்பட்ட கனேமுல்ல வீதியால் 150 மீற்றர் சென்றால் வலது பக்கத்தில் அமைந்திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 15.11.2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 14.11.2013 ஆந் திகதிய டெயிலி மிரர் மற்றும் லங்காதீப பத்திரிகைகளையும் 19.11.2013 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகைகளையும் பாாவையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10% ;
2. உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகார சபை வரிவிதிகளுக்கு அமைய ஒரு வீதம் 1% (ஒரு வீதம்) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்படல் வேண்டும் ;
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப் படுத்தல் கட்டணம் ரூபா 2000 ;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை, ''பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொ.பே. 2456475, 2456480

துசித கருணாரத்ன (ச.நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

2-559

---

**செலான் வங்கி பி எல் சி - பழைய சோனகத் தெரு கிளை**

*1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட சரத்துக்கள் ) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*(''கடன்பட்டோர்'' என்ற வகையில் கொழும்பு -12 ஐச் சேர்ந்த ராஜசிங்கம் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பி எல் சி இற்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து)*

*மேல் மாகாணம் கம்பாஹா மாவட்டத்தில் சியன கோரள மெதபத்து இகலயகொட கிராமத்தில் அமைந்துள்ள யஹோடா எஸ்டேட் என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு $O^1$ அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ.ஏ.பி.ஏ. ரஞ்சித் என்பவரால் தயாரிக்கப்பட்ட 02.06.1999 இல் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 242 இல் குறிப்பிடப்பட்ட துண்டு $O^1$ ( அனுமதிபெற்ற நில அளவையாளர் கே.ஏ. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 04.11.1986 இல் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 544/1986 இல் குறிப்பிடப்பட்ட துண்டு O மற்றும் காணித்துண்டு P ஒன்று சேர்க்கப்பட்ட காணி மீளளவீடு செய்யப்பட்டது) அங்கு காணப்படுகின்ற அனைத்துடன் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்ட காணி பதின்நான்கு தசம் ஐந்து மூன்று பேர்ச்சர்ஸ் (0ஏ. 0றூ. 14.53பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.*

*மேல் மாகாணம் கம்பாஹா மாவட்டத்தில் சியன கோரள மெதபத்து இகலயகொட கிராமத்தில் அமைந்துள்ள யஹோடா எஸ்டேட் என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. 241 இல் குறிப்பிடப்பட்ட துண்டு $P^1$ (அனுமதிபெற்ற நில அளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 04.11.1986 இல் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 544/1986 இல் குறிப்பிடப்பட்ட துண்டு P எனும் காணி மீளளவீடு செய்யப்பட்டது)) அங்கு காணப்படுகின்ற அனைத்துடன் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்ட காணித்துண்டு $P^1$ பதினாறு தசம் எட்டு சைபர் பேர்ச்சர்ஸ் (0ஏ. 0றூ. 16.80பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.*

மேலே விபரிக்கப்பட்டுள்ள சொத்தை பகிரங்க ஏலத்தின் மூலம் அதே இடத்தில் 2014, மார்ச் மாதம் 18 ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- கொழும்பு பெளும்மஹர (கண்டி வீதியில் ) 24 ஆம் மைல் கட்டை பள்ளிக்கூட சந்தியில் அமைந்துள்ள இகல யாகொட வீதியில் சுமார் 2 மீற். தொலைவில் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம். அந்த சொத்து அலுமினியம் தொழிற்சாலையை அண்டியுள்ள 15 அடி அகலத்தில் ஒதுக்கப்பட்ட பாதையின் தொடக்கத்தில் அமைந்திருக்கும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு :- 23.11.2007 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 26.10.2007 ஆந் திகதிய டெயிலி மிரர் மற்றும் லங்காதீப பத்திரிகைகளையும் 25.10.2007 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகைகளையும் பாாவையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10% ;
2. உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1%பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி.
3. ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);
4. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப் படுத்தல் கட்டணம் ரூபா 2000 ;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ;
6. விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொ.பே. 2456485, 2456476, 2456484

துசித கருணாரத்ன (ச.நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

2-596

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.